
10/=

பக்கங்கள் 04

# எதிரொலி
Ethiroli

குரல் 01 அதிர்வு 21 புதன்கிழமை மே 24 2017 ethirolimedia@gm... ...48 48



## வடக்கில் தற்கொலைகள்:
# காரணம் கண்டுபிடிப்பு

“வடக்கு மாகாண மக்களிடையே கடன் சுமை அதிகரித்துள்ளதாலேயே தற்கொலைகளும் அங்கு அதிகரித்துள்ளன” என ஒத்துக் கொண்டுள்ளார் மத்திய வங்கியின் ஆளுநர் இந்திரஜித் குமார சுவாமி.

“போருக்குப் பின்னர் தமிழ் மக்கள் வாழும் வடக்கு, கிழக்கு, மலையகப் பகுதிகளில் திடீரென அதிகரித்துள்ள இந்தக் கடன் சுமைகளுக்குப் பின்னால் சில மர்மங்கள் இருக்கின்றன. இந்தக் கடன் சுமைகளால் தற்கொலை செய்வோரின் வீதமும் அதிகரித்தபடியுள்ளது. எனவே அவை தொடர்பாக ஆய்வு ஒன்றை நடத்தவுள்ளோம்” என்றும் அவர் கூறினார்.(அ)


## வல்வெட்டித்துறையில்
# கஞ்சா மீட்பு!



யாழ். வல்வெட்டித்துறைக் கடற்பரப்பில் 51 கிலோ 700 கிராம் நிறையுடைய கஞ்சாப் பொதிகள் வல்வெட்டித்துறை பொலிஸாரினால் இன்று கண்டெடுக்கப்பட்டுள்ளன.

பொலிஸாருக்கு கிடைத்த தகவலின் பிரகாரம், மீன்பிடிப் படகு ஒன்றில் இருந்தே இன்று புதன்கிழமை அதிகாலை வல்வெட்டித்துறைப் பொலிஸார் இவற்றை மீட்டுள்ளனர்.

குறித்த கஞ்சாப் பொதிகள் வைத்திருந்தமை தொடர்பில் எவரும் கைதுசெய்யப்படவில்லை. மேலதிக விசாரணையின் பின்னர் கஞ்சாப் பொதிகளை பருத்தித்துறை நீதிமன்றில் ஆஜர்படுத்துவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுமென்று வல்வெட்டித்துறை பொலிஸார் தெரிவித்துள்ளனர். (அ–11)



# சம்பந்தரே மன்னியுங்கள்
## நாளை பிரேரணை!

முள்ளிவாய்க்கால் நினைவேந்தலின்போது எதிர்க்கட்சி தலைவர் இரா. சம்பந்தனுக்கு எதிராக கருத்துக்கள் வெளியிடப்பட்டமையை கண்டித்து வடமாகாண சபையின் நாளைய 93 ஆவது அமர்வில் அவசர பிரேரணை ஒன்று கொண்டு வரப்படவுள்ளது. அந்த அமர்வில் அவைத்தலைவரினால் “முள்ளிவாய்க்கால் நினைவு தினத்தில் நாடாளுமன்ற உறுப்பினரும் எதிர்க்கட்சி தலைவருமான இரா.சம்பந்தன் உரையை குறுக்கீடு செய்தமை அநாகரிகச் செயல்” எனத் தெரிவிக்கப்படவுள்ளது. அதற்காக சபையின் கண்டனத்துடன் சம்பந்தனுக்கு ஏற்பட்ட அசௌகரியங்களுக்கு சபை சார்பில் மன்னிப்புக் கோருவதாக குறித்த பிரேரணை முன்வைக்கப்படவுள்ளது. (எ)



## ஹர்ஸ வைத்த
# ‘ஐஸ்’

“மைத்திரியைப் போல் ஒரு எளிமையான மனிதரை நான் கண்டதில்லை” என ஐஸ் வைத்துள்ளார் பிரதி வெளிவிவகார அமைச்சர் ஹர்ஸ டி சில்வா.

அரசுப் பயணமாக ஜனாதிபதி மைத்திரிபால அவுஸ்திரேலியா சென்றுள்ளார். இதன்போது அவர் ஏனைய ஜனாதிபதிகள் போன்று பிரத்தியேக ஆசனங்களையோ தனி விமானத்தையோ பயன்படுத்தவில்லை. சாதாரண பயணிகளுடன் இணைந்தே அவர் பயணித்தார். இதனைப் படம் பிடித்து தன் பேஸ்புக்கில் பதிவிட்ட ஹர்ஸ டி சில்வா “மஹிந்த வெளிநாடு செல்லும் போது தனியான சொகுசு விமானத்தில் ஆடம்பரமாக, முப்படைத் தளபதிகள் சகிதம் பயணிப்பார். ஆனால் மைத்திரியோ பக்கத்து ஆசனத்தில் இருப்பவரால் கூட யாரென்றே கண்டுபிடிக்க முடியாதபடி எளிமையாகப் பயணிக்கிறார்” என்று தெரிவித்துள்ளார்.(அ)

# கைது அச்சம்
## வழக்குக்குச் செல்லாத ஞானசார தேரர்



நீதிமன்ற அவமதிப்பு வழக்கில் கைது செய்யப்படலாம் என்ற தகவல்கள் வெளியாகியிருந்த நிலையில் பொதுபல சேனா அமைப்பின் பொதுச் செயலாளர் கலகொட அத்தே ஞானசார தேரர் இன்றைதினம் நீதிமன்றத்தில் ஆஜராவதிலிருந்து தவிர்த்துக்கொண்டுள்ளார்.

சுகயீனம் காரணமாகவே தேரர் இன்றைய வழக்கு விசாரணையில் மன்றில் முன்னிலையாகவில்லை என்று தெரிவிக்கப்பட்டது. கடந்த வருடம் நீதிமன்ற வளாகத்தில்வைத்து சந்தியா எக்னலிகொடவை அச்சுறுத்தியதாக தொடரப்பட்ட வழக்கு இன்று விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப் பட்டிருந்தது. (உ-5)

# 100

வடக்கின் நூறாவது எரிபொருள் நிரப்பு நிலையம் பூநகரி வாடியடியில் திறந்து வைக்கப்பட்டுள்ளது. பூநகரி பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்துக்குச் சொந்தமான இந்த எரிபொருள் நிரப்பு நிலையம் 22 மில்லியன் ரூபா செலவில் நிர்மாணிக்கப்பட்டுள்ளது. இதனை வடக்கு கூட்டுறவு அமைச்சர் பொ.ஐங்கரநேசன் இன்று சம்பிரதாயபூர்வமாகத் திறந்து வைத்துள்ளார். (எ)



# அவசர உத்தரவு


தேசிய நல்லிணக்கத்துக்கு பாதிப்பு ஏற்படும் வகையிலான சம்பவங்களை தவிர்க்க நடவடிக்கை எடுக்குமாறு பதில் பொலிஸ்மா அதிபர் சீ.டி.விக்ரமரத்ன அதிகாரிகளுக்கு பணிப்புரை விடுத்துள்ளார். பிரதேசங்களில் சட்டம், அமைதியை உரிய முறையில் பேணுவதோடு, மத, வர்க்க, இன நல்லிணக்கத்துக்கு பாதிப்பை ஏற்படுத்தும் சம்பவங்களைத் தவிர்க்க நடவடிக்கை எடுக்குமாறும் சீ.டி.விக்ரமரத்ன கோரியுள்ளார். (எ)



## கனேடியப் பிரதமர்
# புலிகளின் அடிமை?

கனேடியப் பிரதமர் ஜஸ்டின் ட்ரூடே புலம்பெயர் புலிகளின் அடிமை போன்று செயற்படுகின்றார் என சிங்கள ஊடகம் ஒன்று சாடியுள்ளது. கனேடியப் பிரதமர் முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் நிகழ்வொன்றில் பங்கேற்றிருந்ததாகக் கூறப்படுகின்றது. அங்கு அவர் தமிழ் மக்களுக்கு நியாயம் வழங்கப்பட வேண்டுமாயின் இலங்கையில் கலப்பு நீதிமன்றம் உருவாக்கப்பட வேண்டுமென இலங்கையிடம் கோரிக்கை விடுத்திருந்தார். கனேடியப் பிரதமரின் இந்தக் கருத்துக்கு கனடாவில் உள்ள உலக ஸ்ரீலங்கா பேரவை எனும் அமைப்பும் கடும் எதிர்ப்பை வெளியிட்டுள்ளது. (எ)

## அல்வாய் அம்மன் நகைகளை



# ஆட்டையைப் போட்ட ஐயர்

அல்வாய் முத்துமாரி அம்மன் ஆலய சங்காபிசேகத்திற்கு என குருக்கள் ஒருவர் மட்டக்களப்பிலிருந்து அழைக்கப்பட்டிருந்தார். அவர் இன்று வீடு செல்லும்போது அம்மனின் ஏழு பவுண் நகைகளை திருடிச் சென்று நெல்லியடியில் அடகுவைத்துள்ளார். பின்னர் யாழ் நகரம் சென்ற அவர், அந்தப் பணத்தில் மோதிரம் ஒன்றையும் வேறு பொருட்களையும் கொள்வனவு செய்து கொண்டு மட்டக்களப்புக்கு கம்பி நீட்ட முயன்றார். எனினும் களவு தொடர்பில் பொலிஸாருக்கு கிடைத்த முறைப்பாட்டையடுத்து பளையில் வைத்து கைது செய்யப்பட்டார். தற்போது அவர் நெல்லியடி பொலிஸில் ஒப்படைக்கப்பட்டுள்ளதாகத் தெரியவருகின்றது. (எ-11)

# இலங்கை பதிலடி

ஸ்கொட்லாந்துக்கு எதிரான இரண்டாவது பயிற்சியாட்டத்தில் இலங்கை அணி வெற்றிபெற்றுள்ளது.

இன்னும் சில தினங்களில் ஐ.சி.சி. சம்பியன் கிண்ணத் தொடர் ஆரம்பிக்கவுள்ள நிலையில், ஸ்கொட்லாந்துக்கு எதிராக இரு பயிற்சியாட்டங்களில் இலங்கை பங்கேற்றது.

முதல் ஆட்டத்தில் ஸ்கொட்லாந்திடம் தோற்ற இலங்கை இரண்டாவது ஆட்டத்தில் நேற்று ஆடியது.

முதலில் துடுப்பெடுத்தாடிய ஸ்கொட்லாந்து 42.1 ஓவர்களில் சகல விக்கெட்டுகளையும் இழந்து 166 ஓட்டங்களைச் சேர்த்தது.

பின்னர் இலகுவான இலக்கைத் துரத்திய இலங்கை அணி, 22.5 ஓவர்களில் ஒரு விக்கெட் இழப்புக்கு 170 ஓட்டங்களைச் சேர்த்து வெற்றிபெற்றது.


இலங்கையின் துடுப்பாட்டத்தில் தரங்க (53), குசல் மென்டிஸ் (74) ஆகியோர் அரைச்சதம் கடந்து ஆட்டமிழக்காது அணியை வெற்றியடையச் செய்தனர். (ஐ)

# நல்லூர் பிரதேசம் முதலிடம்




யாழ். மாவட்ட பிரதேச செயலகங்களுக்கிடையிலான மாவட்ட மட்ட விளையாட்டு விழா நேற்று பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரி மைதானத்தில் நடைபெற்றது. இதில் நல்லூர் பிரதேச செயலக அணி முதலிடத்தை பிடித்துள்ளது. (ஐ–23)

## தாக்குதல் சூத்திரதாரி



பிரிட்டனில் நேற்று தற்கொலைத் தாக்குதல் நடத்தியவர் அடையாளம் காணப்பட்டுள்ளார்.

சல்மான் அபேடி என்ற பெயரையுடைய இவர், மான்செஸ்டரில் 1994ஆம் ஆண்டு பிறந்துள்ளார்.

இவரது குடும்பம் லிபியாவைச் சேர்ந்தது. அங்கிருந்து அகதியாக வந்து பிரிட்டனில் குடியேறியுள்ளனர். அவருக்கு இரண்டு சகோதரர்களும் சகோதரி ஒருவரும் உள்ளனர்.

மேலும் அவர் கடந்த சில மாதங்களாகவே இஸ்லாமிய உடைகளை அணிந்தபடி வீதியால் சென்றார் எனக் கூறப்படுகிறது. (ஒ)

## "நான் இந்தியன்"



"நான் இந்தியாவின் மைந்தன்" என்று பௌத்தமதத் தலைவர் தலாய்லாமா கூறியுள்ளார்.

அம்பேத்கரின் பிறந்த தினத்தை யொட்டி பெங்களூரில் நேற்று நடைபெற்ற கருத்தரங்கிலேயே அவர் இதனைத் தெரிவித்தார்.

"நான் இந்தியாவின் தொன்மையான ஞானத்தின் தூதர். சமுதாயத்தில் புரையோடியுள்ள நிலப்பிரபுத்துவ நடைமுறைகளால் மக்கள் சுரண்டப்படும் பிரச்சினையுள்ளது. நாம் சகோதரர்களாகவும், சகோதரிகளாகவும் கருதி வாழ்ந்தால் சுரண்டல் என்பது இருக்காது" என அவர் மேலும் கூறினார். (ஒ)

## "இந்தியா சொல்வது பொய்"



இந்தியாவால் எமது நிலைகள் எதுவும் தாக்கி அழிக்கப்படவில்லை என பாகிஸ்தான் இராணுவ அதிகாரி மறுத்துள்ளார்.

பாகிஸ்தான் எல்லையில் காஷ்மீருக்குள் ஊடுருவக் காத்திருந்த தீவிரவாதிகள் மீது பயங்கர தாக்குதல் நடத்தப்பட்டு, இராணுவ நிலைகள் முற்றிலுமாக அழிக்கப்பட்டன என இந்திய இராணுவ அதிகாரிகள் நேற்று டில்லியில் தெரிவித்தனர்

இந்நிலையில், "எங்கள் இராணுவ முகாம்களை அழித்ததாக இந்தியா கூறுவது பொய்யான தகவல்" என பாகிஸ்தான் இராணுவம் மறுப்புத் தெரிவித்துள்ளது.

## ஆம்ஸ்ட்ரோங்கின் பை ஏலத்தில்



'நாசா' விண்வெளி வீரர் நீல் ஆம்ஸ்ட்ரோங் சந்திரனிலிருந்து மண் எடுத்து வந்த 'பை' எதிர்வரும் ஜூலை 12ஆம் திகதி ஏலத்தில் விடப்படவுள்ளது.

அந்தப் பை இலங்கை மதிப்பில் 50 கோடி ரூபாவுக்கு மேல் ஏலம் போகும் என எதிர்பார்க்கப்படுகிறது.

சந்திரனில் முதன் முதலாக காலடி எடுத்து வைத்தவர் நீல் ஆம்ஸ்ட்ரோங் என்பது குறிப்பிடத்தக்கது. (ஒ)

# சர்ச்சை!



இஸ்ரேலில் இனப்படுகொலை செய்யப்பட்ட யூதர்களின் நினைவிடத்தில், உயிரிழந்தவர்களை கொச்சைப் படுத்தும் வகையில் அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் டிரம்ப் எழுதிவைத்திருக்கும் வார்த்தைகள் பெரும் சர்ச்சையை ஏற்படுத்தியுள்ளன.

ஹிட்லரின் நாஜிப் படைகளால் படுகொலை செய்யப்பட்டவர்களுக்காக, இஸ்ரேலின் ஜெருசலேம் நகரில் நினைவிடம் அமைக்கப்பட்டுள்ளது.

அங்கு சென்ற டிரம்ப் நினைவகத்தில் உள்ள குறிப்பேட்டில், "என் நண்பர்களுடன் இங்கு வந்ததற்குப் பெருமைப்படுகிறேன். இது ஓர் அற்புதமான இடம். என் வாழ்நாளில் இதை மறக்கவே மாட்டேன்" என்று எழுதிவைத்துள்ளார்.

இலட்சக்கணக்கான மக்கள் கடும் சித்திரவதைக்கு உள்ளாக்கப்பட்டு கொடூரமாக கொல்லப்பட்டதை நினைகூரும் ஓர் இடத்தில், எதோ இன்பச்சுற்றுலா சென்று அனுபவித்ததைப் போன்று டிரம்ப் குறிப்பிட்டுள்ளார் என்று கடும் விமர்சனம் எழுந்துள்ளது. (ஒ)

# கொரிய மொழியில் திருக்குறள்



கொரிய மொழியில், மொழி பெயர்க்கப்பட்ட திருக்குறள் நூலை தமிழக முதலமைச்சர் எடப்பாடி பழனிசாமி நேற்று வெளியிட்டார்.

அந்த நூலின் முதல் பிரதியை சென்னையில் உள்ள தென் கொரிய தூதரகத்தின் தூதர் ஹங் டே கிம் பெற்றுக்கொண்டார்.

தமிழக முன்னாள் முதலமைச்சர் ஜெயலலிதாவின் அறிவிப்பை நிறைவேற்றும் வகையிலேயே இது வெளியிடப்பட்டுள்ளது. (ஒ)

# காலமானார் ஜேம்ஸ்பொண்ட்




ஜேம்ஸ் பொண்ட் திரைப்படங்களில் நடித்த ரோஜர்மூர் நேற்று திடீரென மரணமடைந்தார்.

1973 ஆம் ஆண்டு முதல் 1985ஆம் ஆண்டு வரை ஜேம்ஸ் பொண்ட் கதாபாத்திரத்தில் நடித்து உலகப் புகழ்பெற்றவ ரோஜர்மூர்.

இந்தக் காலகட்டத்தில் அவர் 7 திரைப்படங்களில் ஜேம்ஸ் பொண்டாகத் தோன்றி ரசிகர்கள் மனதில் நீங்காத இடம் பிடித்தார்.

சுவிட்சர்லாந்தில் தனது குடும்பத்துடன் வசித்து வந்த அவர், புற்றுநோயால் அவதிப்பட்டு வந்த நிலையில் நேற்று தனது உயிரைவிட்டார். இச்செய்தி கேட்டு அவரது ரசிகர்கள் பெரும் துயரில் ஆழ்ந்துள்ளனர். (ஒ)

# தொடர் வலைவீச்சு





தமிழகத்தில் பா.ஜ.க. பலவீனமாக உள்ளது என்பதை ஒப்புக்கொண்ட அமித்ஷா, மீண்டும் நடிகர் ரஜினிகாந்திற்கு அழைப்பு விடுத்துள்ளார்.

ரஜினிகாந்தின் அரசியல் பிரவேசம் நடக்குமா, நடக்காதா என்று பரபரப்பாகப் பேசப்பட்டுவரும் நிலையில் பல்வேறு தலைவர்கள் தங்களுடைய கருத்துக்களைத் தெரிவித்து வருகின்றனர்.

"எங்களுடைய கதவு ரஜினிக்காக எப்போதும் திறந்தே இருக்கும்" என பா.ஜ.க. தலைவர் அமித் ஷா ஏற்கனவே அழைப்பு விடுத்தார்.

இந்நிலையில் நேற்று மீண்டும் அவர் அழைப்பு விடுத்துள்ளார்.

அமித் ஷா ஆங்கில செய்திச் சேவைக்கு அளித்துள்ள பேட்டியில்,

"நாங்கள் நல்லவர்கள் வருவதை வரவேற்கிறோம். எனவே, இது தொடர்பாக ரஜினிகாந்த் ஜிதான் இறுதி முடிவை எடுக்கவேண்டும்," எனக் கூறியுள்ளார்.

"இப்போதைய நிலையில் தமிழகத்தில் பா.ஜனதா பலவீனமாக உள்ளது" என மேலும் கூறியுள்ளார் அமித் ஷா. (ஒ)

## பூநகரியில் தாகம்




கிளிநொச்சி - பூநகரி பிரதேசங்களில் பல்வேறு பகுதியில் தொடர்ந்தும் குடிதண்ணீருக்கான தட்டுப்பாடு நிலவி வருகின்றது.
குறித்த பகுதியில் வாழும் மக்கள் தங்களுக்கான குடி தண்ணீரைப் பெற்றுக் கொள்வதில் அன்றாடம் பல்வேறு சிரமங்களை எதிர்காண்டு வருகின்றனர்.
பூநகரி பிரதேசத்தில் உள்ள 19 கிராம அலுவலர் பிரிவுகளில் மீள் குடியேறியுள்ள 7335 குடும்பங்களில் 10 கிராம அலுவலர் பிரிவுகளில் வாழும் சுமார் 3112 குடும்பங்களுக்கு வருடம் முழுவதும் குடிதண்ணீர் விநியோகிக்க வேண்டிய நிலைமை காணப்படுவது குறிப்பிடத்தக்கது. (ஆ)

## ஹர்த்தால் இரத்து

முஸ்லிம் உரிமைகளுக்கான அமைப்பினால் நாளை வியாழக்கிழமை முன்னெடுக்கப்படவிருந்த நாடு தழுவிய ரீதியிலான ஹர்த்தால் ரத்துச் செய்யப்பட்டுள்ளது. முஸ்லிம் நாடாளுமன்ற உறுப்பினர்கள் சிவில் அமைப்புகள் உலமா சபையை நேற்று இரவு சந்தித்த பின்னர் ஹர்த்தால் ரத்துச் செய்யப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.
முஸ்லிம்களுக்கு எதிராக அண்மைக்காலமாக முன்னெடுக்கப்பட்டு வரும் தாக்குதல்களைக் கண்டித்து குறித்த ஹர்த்தால் முன்னெடுக்கப்படவிருந்தது. (உ)

## இன்றைய கருத்தோவியம்




நன்றி: அவந்த அட்டிக்கல

### ஆசிரிய சேவைக்கு பட்டதாரிகள்

கிழக்கு மாகாண பட்டதாரிகளை ஆசிரியர் வெற்றிடங்களுக்கு உள்வாங்குவதற்கான பூர்வாங்க நடவடிக்கைகள் இன்று முதல் ஆரம்பிக்கப்படவுள்ளன. இந்தத் தகவலைக் கிழக்கு மாகாண முதலமைச்சர் ஹாபிஸ் நசீர் அஹமட் தெரிவித்தார்.
இதனடிப்படையில் மாகாணக் கல்விய மைச்சர், கல்வியமைச்சின் செயலாளர், பிரதம செயலாளர் , மாகாண கல்விப் பணிப்பாளர்கள் மற்றும் பொதுச் சேவை ஆணைக் குழுவின் செயலாளர் ஆகியோர் கலந்துரையாடவுள்ளனர். இதன் போது பாடங்களின் அடிப்படையில் பட்டதாரிகளை இணைத்துக் கொள்வது தொடர்பில் ஆராயப்படவுள்ளது. (இ)

## முகமாலைக் கண்ணிவெடிகள்: பணியாளர் உயிர் அச்சத்தில்!



கிளிநொச்சி - முகமாலைப் பகுதியில் வெடிபொருட்களை அகற்றுவதில் பெரும் சவால்களை எதிர்கொள்ள வேண்டியிருப்பதாக கண்ணிவெடி அகற்றும் நிறுவனத்தினர் தெரிவித்துள்ளனர்.
யுத்தத்தின் பின்னர் இதுவரை மீள் குடியமர்வுக்கு அனுமதிக்கப்படாத பகுதியாகவும் அதிகளவு வெடிபொருள், ஆபத்தான பகுதியாகவும் முகமாலை காணப்படுகின்றது. குறித்த பகுதியில் இராணுவ மண் அணைகள், கைவிடப்பட்ட காவலரண்களுக்கு அருகில் மிக ஆபத்தான வகையில் அதிகளவான நிலக்கண்ணி வெடிகள், வாகன கண்ணி வெடிகள் என்பன புதைக்கப்பட்டுள்ளன.உயிரைப் பணயம்வைத்தே இவற்றை அகற்ற வேண்டியிருப்பதாக கண்ணி வெடியகற்றும் பணியாளர்கள் தெரிவிக்கின்றனர். வெடிபொருள் மீட்பு நடவடிக்கையின் போது, இப்பகுதியில் பலமுறை அவை வெடித்து பணியாளர்கள் காயமடைந்ததும், ஒருவர் பலியானதும் குறிப்பிடத்தக்கது. (அ)

## சிறுநீரகக் கப்பம்: இலங்கைப் பெண் தப்பித்தார்

சிறுநீரகங்களை கேட்டு தடுத்துவைக்கப்பட்டிருந்த இலங்கைப் பணிப்பெண், றியாத்திலுள்ள இலங்கைத் தூதரக அதிகாரிகளால் நேற்று விடுவிக்கப்பட்டுள்ளார்.
குறித்த பெண், இரண்டு வருட ஒப்பந்தத்தின் அடிப்படையில் 2015 ஆம் ஆண்டு, பணிப்பெண்ணாக றியாத்துக்குச் சென்றுள்ளார்.
2017ஆம் ஆண்டு மார்ச் மாதம் அவருடைய ஒப்பந்தம் முடிவடைந்தது. ஆயினும் சிறுநீரக நோயினால் பாதிக்கப்பட்டிருந்த தன்னுடைய மனைவிக்கு, சிறுநீரகமொன்றைத் தானமாக வழங்குமாறு கோரி அவரது முதலாளி 2 மாதமாகக் குறித்த பெண்ணைத் தடுத்து வைத்திருந்தார். எனினும் தூதரக அதிகாரிகளின் முயற்சியால் அவர் விடுவிக்கப்பட்டுள்ளார். (அ)

## துப்பாக்கிதாரிகள் நால்வர் கைது



இலங்கையில் தயாரிக்கப்பட்ட துப்பாக்கிகளுடன் மொரவெவ பிரதேசத்தில் நால்வர் கைது செய்யப்பட்டுள்ளனர்.
பொலிஸாருக்கு கிடைக்கப் பெற்ற தகவலுக்கு அமைய,முச்சக்கர வண்டி ஒன்றைச் சோதனையிட்ட போதே இந்தத் துப்பாக்கிதாரிகள் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.
சந்தேகநபர்களை இன்று திருகோணமலை நீதிமன்றத்தில் ஆஜர்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. (அ)



## சம்பந்தரைச் சந்தித்த முஸ்லிம் பிரதிநிதிகள்

முஸ்லிம்களுக்கு எதிராக தீவிரமடைந்து வரும் இனவாத நடவடிக்கைகள் தொடர்பில் நல்லாட்சி சிக்கான தேசிய முன்னணியின் பிரதிநிதிகள் எதிர்க்கட்சித் தலைவர் இரா. சம்பந்தனை நேற்றுச் சந்தித்துக் கலந்துரையாடியுள்ளனர்.
இந்தச் சந்திப்பு நேற்றுப் பிற்பகல் 4 மணியளவில் நாடாளுமன்றத்தில் அமைந்துள்ள எதிர்க்கட்சித் தலைவரின் அலுவலகத்தில் இடம்பெற்றது.
இதன் போது, கடந்த ஒரு மாத காலத்தில் முஸ்லிம்களுக்கு எதிராக இடம்பெற்ற இனவாதசம்பவங்கள்தொடர்பான விரிவான அறிக்கை ஒன்று எதிர்க் கட்சித் தலைவரிடம் கையளிக்கப்பட்டது. (அ)

## திடீர் விஜயம்

மடு பிரதேச செயலகத்துக்குட்பட்ட பாலம்பிட்டி மாதர் கிராம அபிவிருத்தி சங்கத்தால் நடத்தப்படும் சிறிய ஆடைத்தொழிலகத்துக்கு நேற்று செவ்வாய்க்கிழமை வட மாகாண மீன்பிடி, போக்குவரத்து, கிராம அபிவிருத்தி அமைச்சர் பா.டெனிஸ்வரன் விஜயம் செய்து, அங்குள்ள பணியாளர்களோடு கலந்துரையாடினார்.(அ)



## 6 இந்திய மீனவர்கள் கைது

நெடுந்தீவுக் கடற்பரப்பில் சட்ட விரோதமாக மீன்பிடியில் ஈடுபட்ட 6 இந்திய மீனவர்களைக் கடற்படையினர் கைதுசெய்துள்ளனர். நேற்றிரவு கைதுசெய்யப்பட்ட குறித்த இந்திய மீனவர்களை மேலதிக நடவடிக்கைகளுக்காக யாழ். கடற்றொழில் உதவிப் பணிப்பாளரிடம் ஒப்படைத்துள்ளதாக கடற்படையினர் தெரிவித்தனர். (உ)



## நாளை நாளும் கோளும்

25.05.2017 வியாழக்கிழமை ஏவிளம்பி வருடம் வைகாசி மாதம் 11ஆம் நாள்
அமாவாசை பி.இ. 02.09 வரை | கார்த்திகை பி.இ. 01.00 வரை | மரணயோகம்
இராகுகாலம் 01.22-02.52 | சுபநேரம் 07.22-08.52 | எமகண்டம் 05.52-07.72

தீர்த்தத் திருவிழா
- புளியங்கூடல் இந்தன் முத்துவிநாயகர்
- வில்லூன்றி வீரகத்தி விநாயகர்
- சாவல்கட்டு அந்திக்குழி ஞானவைரவர்
- சந்திவெளி சித்திவிநாயகர்

| மேஷம் | ரிஷபம் | மிதுனம் | கடகம் | சிம்மம் | கன்னி | துலாம் | விருச்சிகம் | தனுசு | மகரம் | கும்பம் | மீனம் |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| வரவு | தாமதம் | செலவு | ஆதரவு | அசதி | வெற்றி | விருத்தி | நன்மை | ஆர்வம் | போட்டி | அமைதி | உயர்வு |

எதிரொலி
Ethiroli

காணாமல் போன படைச்சிப்பாயைத் தேடி

## இராணுவ முகாமில் அகழ்வுப் பணி

விசுவமடுப் பகுதியில் பணியாற்றிய வறக்காபொல பகுதியைச்சேர்ந்த நிமல் சேனாரத்ன என்ற படைச்சிப்பாய் காணாமல் போன சம்பவம் தொடர்பில் நேற்று நான்காவது முறையாக அகழ்வுப் பணி முன்னெடுக்கப்பட்டிருந்தது. குறித்த இராணுவ முகாம் பகுதியில் சிப்பாயைக் கொன்று புதைத்திருக்கலாம் என்ற சந்தேகத்தின் பெயரிலேயே முல்லைத்தீவு நீதிமன்ற உத்தரவுக்கமைய அகழ்வுப் பணி மேற்கொள்ளப் பட்டிருந்தது. எனினும் எவ்வித தடயப் பொருட்களும் மீட்கப்படவில்லை என தெரிய வருகின்றது. 2009 ஆம் ஆண்டு பிற்பகுதியில் விசுவமடு இராணுவ முகாமில் இணைந்து கொண்ட படைச்சிப்பாய் 2010 ஆம் ஆண்டு இரண் டாம் மாதம் முதல் வீடு வந்து சேரவில்லை என அவரது மனைவியால் முறைப்பாடு செய்யப்பட்டிருந்தது. (உ)

## பாடசாலைகள் மூடப்படும்

புனித ரமழான் நோன்புக் காலத்தை முன்னிட்டு, நாட்டிலுள்ள சகல அரசாங்க முஸ்லிம் பாடசாலைகளும் நாளைமறுதினம் வெள்ளிக்கிழமை மூடப்படவுள்ளதாக, கல்வி அமைச்சின் முஸ்லிம் பாடசாலைகள் அபிவிருத்திக் கிளையின் சிரேஷ்ட பணிப்பாளர் இஸட். தாஜுதீன் தெரிவித்துள்ளார். (அ)



# விமர்சித்தால் வெளியேறுவேன்

"தேர்தலை நடத்துவதற்கு நாம் அனைத்து ஏற்பாடுகளையும் தயாராக வைத்துள்ளோம். இந்த நிலையில், தேர்தல்கள் ஆணைக்குழுவினை பற்றி தேவையற்ற விமர்சனங்கள் முன்வைக்கப்படுமாயின் இந்த ஆணைக்குழுவினை விட்டு நான் வெளியேற வேண்டிவரும்" என தேர்தல்கள் ஆனைணக்குழுவின் தலைவர் மஹிந்த தேசப்பிரிய எச்சரித்துள்ளார்.

" உள்ளூராட்சித் தேர்தலை எப்போது, எந்த முறையில் நடத்துவது என்பது குறித்து நாடாளுமன்றமும், நீதிமன்றமுமே தீர்மானிக்கவேண்டும். அத்துடன் ஆளுந்தரப்பினருக்கும் மேற்படி பொறுப்பு உள்ளது.

உள்ளூராட்சி சபைத் தேர்தலுக்கான அனைத்து நடவடிக்கைகளும் எம்மால் நிறைவு செய் யப்பட்டு தயார்நிலையில் இருக்கின்றன. ஆனால் தேர்தலை நடத்துவதற்கான சட்டம் இன்னும் நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படவில்லை.

இதைவிடுத்து எமது ஆணைக்குழுதான் தேர்தலை நடத்தவேண்டுமென எவரேனும் நிர்ப்பந்தித்தால் நான் ஆணைக்குழுவில் இருந்து வெளியேறுவதைத் தவிர வேறு வழியில்லை" அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

## அந்த நாள் ஞாபகம்.....!




2000.05.24

கொழும்பில் உள்ள நோர்வேத் தூதரகம் மீது இதேநாளில் குண்டு வீசப்பட்டது. எவருக்கும் உயிர்ச்சேதமில்லை.

## வடக்கு மாகாண கீதம் மீண்டும் அழைப்பு

வடக்கு மாகாணத்துக்கான "மாகாண கீதம்" ஒன்றினை உருவாக்குவதற்கான விண்ணப்பங்கள் கோரப் பட்டுள்ளன. வடக்கு மாகாண கீதத்துக்கான ஆக்கங்கள் வடக்கு மாகாண மக்களின் வாழ்வியல் மரபுகள் மற்றும் கலை, கலாசாரம், பண்பாடு ஆகியவற்றைத் தழுவிய தாகவும் பாரம்பரிய இசையினைக் கொண்டதாகவும் அமைந்திருக்க வேண்டும் என அறிவுறுத்தப் பட்டுள்ளது. மாகாண கீதத்தினை உருவாக்குபவர்கள் எதிர்வரும் ஜூன் 30 ஆம் திகதிக்கு முன்னராக தலைவர், நடவடிக்கைக் குழு, பேரவைச் செயலகம், வடக்கு மாகாணசபை, ஏ-9 வீதி, கைதடி என்ற முகவரிக்கு அனுப்பிவைக்குமாறு அறி விக்கப்பட்டுள்ளது. (எ)

## 120 பெண்கள் நாடு திரும்புகின்றனர்!

வீட்டுப் பணிப்பெண்களாக தொழிலுக்குச் சென்று பல இன்னல்களை அனுபவித்த இலங்கையைச் சேர்ந்த பணிப் பெண்கள் 52 பேர் நாடு திரும்பியுள்ளனர். குவைத் நாட்டிலிருந்தே இவர்கள் இன்று புதன் கிழமை காலை கட்டுநாயக்க சர்வதேச விமான நிலையத்தை வந்தடைந்தனர். மேலும் 68 பெண்கள் குவைத்திலிருந்து இன்று மாலை நாடு திரும்பவுள்ளதாக தூதரகம் தெரிவிக்கின்றது. (உ-5)

# விசேட வரவேற்பு



ஆஸ்திரேலியாவுக்கான உத்தியோகபூர்வ விஜயத்தை மேற்கொண்டுள்ள ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தலைமையிலான இலங்கை உயர்மட்டக் குழுவினர், இன்று காலை, கன்பரா விமான நிலையத்தைச் சென்றடைந்தனர். இதன்போது ஜனாதிபதி மைத்திரிக்கு விசேட வரவேற்பளிக்கப்பட்டது.

ஆமையைக் காப்பாற்றிய

## பேஸ்புக் வைத்தியர்

உயிருக்கு போராடிய ஆமையொன்றை பேஸ்புக் பதிவை வைத்து, வைத்தியர் ஒருவர் காப்பாற்றியுள்ளார்.

இனந்தெரியாத நபர்களினால் ஆமை ஒன்றின் ஓடு சிதைக்கப்பட்டு அது நடுவீதியில் உயிருக்கு போராடிக் கொண்டிருந்தது. இதனைக் கண்ணுற்ற சிலர் அதனை பேஸ்புக்கில் பதிவேற்றினர். அந்தப் பதிவினை கண்ணுற்ற மஹியங்கனையச் சேர்ந்த அருண சந்திரசிறி என்ற வைத்தியர் சம்பவ இடத்துக்குச் சென்று ஆமையை மீட்டு சிகிச்சை வழங்கி அதனை காப்பாற்றியுள்ளார். (அ)



## ஆசிரியர்களை கண்டுகொள்ளாத பஸ்

யாழ்ப்பாணம் - மன்னார் வீதியில் பயணிக்கும் பஸ்கள் அந்தப் பகுதியில் அமைந்துள்ள பாடசாலைகளில் கல்வி கற்பிக்கும் ஆசிரியர்களை ஏற்றாது செல்வதாக ஆசிரியர்கள் விசனம் தெரிவித்துள்ளனர்.

யாழ்ப்பாணம் - மன்னார் (ஏ - 32) வீதியில் மிகக்குறைந்தளவிலான பஸ்களே சேவையில் ஈடுபடுகின்றன. இந்த நிலையில் சேவையில் ஈடுபடும் அந்த ஒரு சில பஸ்களும் தங்களை ஏற்றாமல் செல்வதால் பெரும் சிரமங்களை எதிர்நோக்குவதாக ஆசிரியர்கள் தெரிவிக்கின்றனர். (அ)



புத்தரின் கொள்கைகள் உதாசீனம்

## ஐ.நா. வதிவிடப் பிரதிநிதி கவலை

இலங்கையில் கடந்த வாரம் சர்வதேச வெசாக் தினம் கொண்டாட்டப் பட்டது. இந்த வாரம் புத்தரின் கொள்கைகள் உதாசீனம் செய்யப்பட்டுள்ளன என ஐக்கிய நாடுகள் அமைப்பின் வதிவிடப் பிரதிநிதி உனா மக்குலே கவலை வெளியிட்டுள்ளார்.

இதேவேளை, குரோத உணர்வைத் தூண்டுவோருக்கு எதிராகவும் வன்முறைகளில் ஈடுபடுவோருக்கு எதிராகவும் நடவடிக்கை எடுக்கவேண் டும் எனவும் அவர் அரசிடம் கோரிக்கை விடுத்துள்ளார். (உ)

# தீர்ந்தது பிரச்சினை



சுழிபுரம் மேற்கு கடற்றொழிலாளர்கள், காரை நகர் கடற்றொழில் பிரதேசத்தில் களங்கண்டி வலைகளைப் பாய்ச்சியதால் ஏற்பட்ட முறுகல்நிலை தீர்த்து வைக்கப்பட்டுள்ளது. குறித்த இரு பகுதிப் பிரதேச செயலர்க ளும் நேற்று கடற்பகுதிக்குச் சென்று நடத்திய பேச்சுக்களின் அடிப்படையில் இரு பிரதேச மீனவர்களுக்குமிடையில் நிலவிய முறுகல் நிலை தீர்க்கப்பட்டு வைக்கப்பட்டுள்ளதாக தெரியவருகின்றது. (ஊ-6)

## மாணவிகளை கடத்த முயற்சி இளைஞன் கைதாகி விடுதலை

காதலியுடன் முரண்பட்ட சிங்கள இளைஞன் காதலியையும் நண்பியையும் கடத்த முற்பட் டதாக கைதாகி பின்னர் விடுவிக்கப்பட்டுள்ளார். மட்டக்களப்பைச் சேர்ந்த தமிழ் மாணவி ஒருவரை குறித்த இளைஞன் காதலித்தார். ஆயினும் இன்று காதலியோடு அவர் முரண்பட்டார். அதன்போது பிரதேச வாசிகள்கொடுத்த முறைப்பாட்டின் அடிப்படையில் அவர் கடத்தல் குற்றச்சாட்டில் கைதானர். வாக்குமூலம் பெற்ற பின்னர் அவர் விடுவிக்கப்பட்டுள்ளார். (எ)



இப்பத்திரிகை சிவஞானம் ஜெயானந்தனால் பருத்தித்துறை வீதி, 5ஆம் கட்டை, கோப்பாய் மத்தி, கோப்பாய் என்ற முகவரியிலுள்ள நாவலர் அச்சகத்தில் 24.05.2017 அன்று அச்சிட்டு வெளியிடப்பட்டது.